2116


# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி 232 33

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ தை 1986 ★ இதழ் 121



## புதுவருடம் பூத்துமலரப் பிரார்த்தனை வேண்டும்

**உடலை வளர்ப்பதற்கு உணவு வேண்டும், உயிரை வளர்க்கப் பிரார்த்தனை வேண்டும் என்பது காந்தியடிகள் வேண்டுகோள். குருதேவர் தாகூரும் பிரார்த்தனையைப்பற்றிப் பேசும்போது, தூய மனத்தோடு செய்யப்படும் பிரார்த்தனையைக் கடவுள் வரவேற்கின்றார் என்றார்.**

எல்லாம் வல்ல கடவுளை மனத்தூய்மையோடு சிந்தித்தல் பிரார்த்தனையாகும். பிரார்த்தனை காந்தியடிகளின் வாழ்க்கையை உயர்த்தியது. அவர் பிரார்த்தனை செய்யாதிருந்தால், அவருக்குண்டான பிரச்சினைகள் சிக்கல்கள் அவரைப் பைத்தியக்காரனாக்கியிருக்கும். அவரின் மனக்கலக்கங்களைப் பிரார்த்தனை தீர்த்த வகையினை அவரே சத்திய சோதனையிற் கூறியுள்ளார்.

பிரார்த்தனை சிறந்த கருவி. அதிலே நம்பிக்கையிருத்தல் வேண்டும். உலகத்தில் பெரியவர்கள் பிரார்த்தனைமூலம் கேட்டறிந்த உண்மைகள் உய்தி வழிகள் மிகப்பல. வாழ்வில் வலிமையும் அமைதியும் தரவல்ல பிரார்த்தனை ஒவ்வொரு இல்லத்திலும் மாலை வேளைகளில் நடைபெறுதல் வேண்டும். குடும்பத்தவர்கள் எல்லோரும் கூட்டு வழிபாடாற்றித் தம் குலதெய்வத்தை முன்னிறுத்திப் பிரார்த்தித்துப் புதுவருடத்தில் உய்திபெறுவோமாக.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



யாழ்ப்பாணத்தில் புதிய சோனகத்தெரு அபூபக்கர் சிறுவர் பாடசாலை வளவில் (பொம்மைவெளியில்) முஸ்லிம்களின் குடியேற்றம் பசுமையாக நிலவ மில்க்வைற் தொழிலதிபர் கைகொடுத்தல்

அறிவு ஓங்குமளவில் பேச்சு குறைகிறது

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

திருவெண்ணெய் நல்லூர்

பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனெல லாமே.

திருச்சிற்றம்பலம்

பித்தனே! பிறையைச் சூடியவனே, பெருமையுடைய வனே, தென்னாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூரின் அருள்துறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தலைவனே, அடியேனுடைய நெஞ்சில் தேவரீரை அக லாது வைத்தருளியுள்ளீர்; அதனால் எவ்வாற்றாலும் தேவ ரீரை மறக்கமுடியாமல் நினைந்துருகி முன்னரே தமக்கு அடியவனாகியபின், இப்பொழுது தேவரீருக்கு அடியவ னல்லேன் என்று எதிர்வழக்குப் பேசியமை பொருந்தாது [அடியேனை மன்னித்தருள வேண்டும்.]

## மில்க்வைற் சலவை

| | |
|---|---|
| வீட்டில் சலவை | எப்படிச் சலவை? |
| விரைவில் சலவை | எவற்றால் சலவை? |
| சிக்கன சலவை | நீலக்கட்டிச் சலவை |
| சிறந்த சலவை | சலவைப் பவுடர் சலவை |
| மெதுவான சலவை | சலிப்பில்லாத சலவை |
| வெண்மையான சலவை | சந்தோஷமான சலவை. |
| சுகமான சலவை | |
| சுகாதாரமான சலவை | |




### சுற்றந் தழால்

உறவினரைப் பேணுதல்

சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

செல்வம் பெற்றதனால் ஒருவன் பெறும் பயனாவது, உற்றார் உறவினரால் தான் சூழப்படும் வகையில் அவர் கள் எல்லோரையும் தழுவி நடந்துகொள்ளுதலாம்.

### Friendship with Kinsmen


The best benefit that comes of having earned enough wealth is to move about encompassed by Kinsfolk.

## 1986 ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | புதன் | — | 1986ஆம் ஆண்டாரம்பம்<br>சி. வை. தாமோதரம்பிள்ளை நினைவு |
| 2 | வியாழன் | — | இயற்பகை நாயனர் குருபூசை<br>கண்டியரசன் இராசசிங்கன் நினைவு |
| 3 | வெள்ளி | — | பகல் 11-32 அட்டமி<br>தமிழ்வீரன் கட்டபொம்மன் நினைவு |
| 4 | சனி | — | அட்டமி – நவமி |
| 5 | ஞாயிறு | — | நவமி மு. ப 7-38 வரை |
| 6 | திங்கள் | — | ஏகாதசி |
| 7 | செவ்வாய் | — | ஏகாதசி |
| 8 | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 9 | வியாழன் | — | போதாயன அமாவாசை<br>தேசபிதா அருணசலம் நினைவு |
| 10 | வெள்ளி | — | அமாவாசை விரதம்<br>கெற்போட்ட முடிவு |
| 12 | ஞாயிறு | — | சுவாமி விவேகானந்தர் தோற்றம் |
| 14 | செவ்வாய் | — | தமிழ்த்தை முதல்நாள்<br>தைப்பொங்கல் பண்டிகை |
| 15 | புதன் | — | பட்டிப்பொங்கல்<br>சு. நடேசபிள்ளை நினைவு |
| 17 | வெள்ளி | – | மாவிட்டபுரம் லட்சார்ச்சனை<br>சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் தோற்றம்<br>மாலை 5-48 — அட்டமி |

(15–ஆம் பக்கம் பார்க்க)

★ முகமலர்ச்சியுள்ளவன் உலகுக்குரியவனாவன் ★



# பிள்ளையார்

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமானின் அருள்மூர்த்தங்களுள் மிகவும் மூத்தது பிள்ளையார் திருவுருவம். மூத்தவிநாயகன் என்பது அவருடைய திருநாமம். விநாயகர் ஓங்கார வடிவினர். உலகம் தோன்றுவதற்கு முதற்காரணமாய மகாமாயை பிரணவ வடிவமானது. அது சிவசக்தியாயமைவது. அதுவே விநாயகம். விநாயகம் அல்லது விநாயகர் தமக்குமேலே தலைமை இல்லாதது. அது ஏகநாயகமாயிருப்பது. பிரணவப்பொருளாம் பெருந்தகையின் நாதமும் விந்துவும் கீறாகவும் சுழியாகவும் அமைந்தமையினாலே பிள்ளையார் சுழி "உ" என வடிவங் கொண்டுள்ளது. இது விநாயகப்பெருமானின் குறியீடாகும் சிவத்திலிருந்து முதலில் உண்டாய ஒலி ஓம் என்னும் பிரணவ நாதம். அந்த ஓங்கார ஒலியின் வடிவமே விநாயகப்பெருமானின் திருவுருவம்.

பிரணவகணபதி. ஓங்காரகணபதி, மூத்தகணபதி.

பசுக்களாய ஆன்மகோடிகளுக்குத் தலைவர் பசுபதியாய சிவபெருமானைப்போல, கணங்களாய சண்டி, நந்தி முதலானோருக்குத் தலைவர் கணபதியாய விநாயகப் பெருமான். கண என்பதும் உயிர்க்கூட்டமேயாம். எனவே கணபதியும் பசுபதியும் ஒருவரே.

நிருமலனாய கணபதியை நீள நினைந்து வணங்கி வாழ்த்தி எவர் எக்கருமத்தைத் தொடங்கினாலும் அக் கருமம் இனிது நிறைவேறும். இன்று பதினோராம் ஆண்டினாரம்பத்தில் 121ஆம் இதழை விநாயக வணக்கத்தோடு ஆரம்பிக்கும் இச்செய்தி வளர்வதாக.

" அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந் தல்லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாட்கொண் டுய்க்கும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம் "

= விநாயகபுராணம்

## ஒருவரிப் பழமொழி

261 தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்.
262 பொல்லாத காலம் சொல்லாமல் வரும்.
263 போனதை நினைப்பவன் புத்தியில்லாதவன்.
264 இயமனை எவராலும் ஏமாற்ற முடியாது.
265 தென்றல் முற்றினால் பெருங்காற்று.
266 தேடித் தின்றவர் தெய்வத்தோடொத்தவர்.
267 தேடுவாரற்ற பிணம் தெருவோடே.
268 தேராச் செய்கை தீராச் சஞ்சலம்.
269 தேனுக்கு ஈயைப் பிடித்துவிட வேண்டுமா?
270 தை பிறந்தால் வழி பிறக்கும்.
271 தையலுமில்லான் மையலுமில்லான்.
272 தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
273 தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவு.
274 தொழுவம் புகுந்த ஆடு புழுக்கையிடாமற் போகாது
275 தோட்டக்காரன் வாழ்வு காற்றடித்தாற் போச்சு.
276 தோட்டத்திற் பழமிருக்கத் தூரப் போவானேன்?
277 தோட்டத்து நரி கூட்டத்தில் வருமா?
278 தோழனோடும் ஏழைமை பேசேல்.
279 தோழிலிருந்து காதைக் கடிப்பதா?
280 தோன்றிய யாவும் அழியும்.

## ஆங்கிலத்தில் அடுக்குமொழி

Needs and demands
Neglect and evade
Nimble and airy
Nonsense and absurdity
Nooks and corners
Notable and conspicuous
Noted and distinguished
Nourish and foster
Nucleus and begining
Nullify and destroy
Observations and reflections
Obstacles and disasters
Occult and hidden
Offensive and aggressive
Official and authoritative
Oneness and unity
Open and inviting
Order and uniformity.

★ வஞ்சனை இல்லாதவர்களுக்கு எல்லாம் சேரும் ★



## மங்கலம் பொலிய வடக்கு நோக்கும் சூரியபகவானே வருக!

தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற நம்பிக்கையில் தமிழர் உன்னை வரவேற்கிறார்கள். உலகத்துக்கு வாழ் வளிக்கும் தேவரீர் தமிழருக்கு வழிபிறக்க வகைசெய்ய வேண்டும். வெள்ளமும் புயலும் வேதனையும் சாக்காடும் பொருளழிவும் பட்டதெல்லாம் போதும் என்றாகிவிட்டது. தேவரீர் கண்கண்ட கடவுளாய் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தீர். இனித் தெற்கிலிருந்து வடக்கு வரும் போது என்ன கொண்டுவரப் போகிறீர்?

தமிழ்ப்புலவர்கள் தேவரீரைப் போற்றித் தமது காவியங்களைத் தொடங்குதல் வழக்கம். உலகம் உவப்பத் திரிதரு ஞாயிறு என்றும் ஞாயிறு போற்றுதும் என்றும் பழைய புலவர்கள் பாடியுள்ளார்கள். அண்மைக் காலத்து எம்மிடையே வாழ்ந்த எங்கள் அருமை ஆசிரியர் மாவிட்டபுரத்து நவநீதகிருஷ்ண பாரதியார் என்னும் வெண்ணெய்க்கண்ணனார் ஐம்பதாண்டுகளுக்குமுன் தேவரீர் பெயரால் ஞாயிறு என்னும் நாமத்தில் யாழ்ப்பாணக் கலாநிலையம் என்னும் சங்கத்திலிருந்து வந்த கற்பகம்போன்ற சஞ்சிகையில் வெளியிட்ட பாடல்கள் உச்சமானவை. அவற்றில் ஒருசில பாடித் தேவரீரை வரவேற்கின்றோம். வருக! வருக!!

## செழுங்கதிர்ச் செல்வம்

பறவைப் பார்ப்பும் உன்வரவைப்
பார்த்து மழலைச் செஞ்சிறுவாய்
நிறையப் புகலும் பாட்டெல்லாம்
நெறியே வந்தென் செவிப்புகுதும்
நறவு பழுத்த செழுந்தமிழால்
நானே பாடா திருந்திடுவேன்!
கறவைப் பசுவைக் கன்றூட்டுங்
காலங் காட்டி வருகதிரே!

பிணமாய்க் கிடக்கும் பேருலகைப்
பெரிய வருள்கோண் டுணர்வளித்துக்
குணமே சொள்ள வெழுப்பி வரும்
கோனே பொருள்கள் தமக்குரிய
வணமே காட்டி மயக்கறுக்கும்
வானோர் சோதிப் பெருமானே!
பணமே பேறுப் படைக்கிலன்றன்
பயன்காண் மாறென் செழுங்கதிரே!


கோடிக் கதிராற் பலகோடி
குணத்தைக் குழைத்துப் புவனமெலாம்
ஓடிப் புறத்தோ டகம்புகுக்கி
யுயிரை யளிக்கு மோவியமே!
நாடித் தெளியும் விழிக்கெல்லாம்
நலன்செய் விழியே! புலவரெலாம்
பாடப் படைத்த காவியமே!
பணிந்தேன் நின்தாள் செழுங்கதிரே!

நச்சைப் போக்கி யமுதளிக்கும்
நளினக் கரத்தாய்! பழிசான்ற
எச்சிற் குப்பைக் குட்புகுந்தும்
இழித்தற் கியலாப் பெருவரத்தாய்!
பிச்சைக் குடிக்கும் வேந்தர்கள் வாழ்
பெரிய குடிக்கு மொருபடித்தாய்
இச்சித் தேகி யருள்சுரக்கும்
எந்தாய் மூலத் தெழுங்கதிரே!

## பால் பொங்கவேண்டும்

அன்பு பொங்கவேண்டும்
ஆண்மை பொங்கவேண்டும்
இன்பம் பொங்கவேண்டும்
ஈகை பொங்கவேண்டும்
உழைப்புப் பொங்கவேண்டும்
ஊக்கம் பொங்கவேண்டும்
எழில் பொங்கவேண்டும்
ஏர் பொங்கவேண்டும்
ஐயம் பொங்கவேண்டும்
ஒழுக்கம் பொங்கவேண்டும்
ஓதல் பொங்கவேண்டும்
ஔதாரியம் பொங்கவேண்டும்
பட்டி பொங்கவேண்டும்
பால் பொங்கவேண்டும்.

★ பாவியரின் பணம் பாழாகவே போகும் ★



## Sayings of Swami Sivananda

Religion is the self - realisation
Life without religion is death
Character is the key to self – realisation
Truthfulness is the begining of saintliness
There is no enemy like anger
There is no virtue like purity
Purity is the gateway to God
Remember God at all times
Do always virtuous actions
The Salt of life is selfless service
The bread of life is universal love
The water of life is purity
The pirot of life is meditation
Faith is the eye that sees the Lord
Prayer takes you to the domain of God
Devotion is both the means and the end
Blind is the man who has not seen God
Give the mind to God and hand to work
Silence is the best eloquence
Duty Performed is a moral tonic
First become good and then enjoy
Trust in God and do the right.

## தாடிப்பழம்

மயிர் முளைத்த உருண்டைப் பழம் றம்புட்டான் மல்வானை என்னும் இடத்தைச் சேர்ந்ததால் மல்வானை எனவும் வழங்கும். அது மலேசியாவில் மனித தாடிப் பழம் எனப் பெயர் பெற்றது. றம்பு என்றால் தாடி என்றும் உட்டான் என்றால் மனிதன் என்றும் பொருள். தாவரவியலில் நிபீலியன் லப்பாசியன் எனப்பெற்ற இப்பழத்தை முதலில் அரேபியர்களே இலங்கைக்குக் கொண்டுவந்தனர் என்பர்.

றம்புட்டானை இலங்கையில் நாட்டுவதற்கு முதலில் முயன்றவர் பண்டாரநாயக அவர்களின் முன்னோராவர். மலேயாவிலிருந்து விதைகள் கொண்டுவந்து அவர் புறுளுபிட்டியா தோட்டத்தில் அதனை நாட்டியபோதே அதன் விதைகளில் ஓரளவு தொகையை அயலவர்களுக்கும் விநியோகஞ்செய்தார் என்பர்.

இஃது இவ்வாறாக றம்புட்டான் பற்றிய இன்னொரு வரலாறு. அது போர்த்துக்கேய தளபதி அசிவிடோ யாவாவிலிருந்து அதனைக் கொண்டுவந்தார் என்பதாகும்.

தாடிப்பழத்தை எவர் கொண்டுவந்து நாட்டினாலும் அது மல்வானைக்கே புகழ் பரப்புகிறது. அது வல்கம, மாபிட்டிகம, களுகொண்டயவா முதலிய இடங்களிலும் ஓரளவு விளைகிறது.

மல்வானை என்னும் இடம் இலங்கை வரலாற்றில் சிங்கள மன்னருக்கும் போர்த்துக்கேயருக்குமிடையில் நடந்தேறிய ஒப்பந்தத்தால் புகழ் பெற்றதுமாகும். இந்த நகரம் டொம்பே தொகுதியில் உள்ள அழகான இடமாகும்.

## நீர்

காற்றுக்கு அடுத்ததாக உயிரினங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது நீர். நீர் இல்லாவிட்டால் உலகம் நிலைக்கமாட்டாது. புல், பூண்டு முதலிய தாவரங்கள்முதல் மனிதர் வரையுள்ள எல்லா உயிரினங்களுக்கும் நீர் அவசியமாக வேண்டிய பொருள்.

நீர் உணவாக இருப்பதோடு உணவுகளை உண்டாக்குவதற்கும் உதவியாயுள்ளது. உழவுக்கும் தொழிலுக்கும் நீர் உதவியானது. உடற்சுத்தத்துக்கும் எல்லாவித சுத்திகரிப்புகளுக்கும் நீர் அவசியம் தேவையானது. மனிதன் நாகரிகமடைவதற்கு முதலில் உதவியது நீர்.

நாம் நீரைத் தெய்வம் எனப் போற்றுகிறோம். நீரைக் கண்டபடி சிந்தக்கூடாது. அதனை மட்டாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நீரை அழுக்குப்படுத்துதல் ஆகாது. அதன் தூய்மையைக் கெடுத்தல் ஆகாது.

## இப்படிச் சொன்னார்கள்

1. எட்மண் பேர்க் என்னும் ஆங்கிலமேதை சொன்னார், ''நல்லவர்கள் ஒன்றும் செய்யாமல் இருந்தால் அடாத்துகள் தாண்டவமாடும்''.
2. ''நாரியர்கள் உயர்ந்தால் நாடுயரும்'' என்று தமிழன் சொன்னதை மேற்கு நாட்டவர் ''எவ்வழி நாரியர் அவ்வழி உலகம்'' என்றார்கள்.
3. சாத்தான் பெண்களின் மனதைப் பழுதாக்கினால் உலகமே பழுதாய்ப்போகும். எனவே பெண்கள் கவனமாக இருத்தல் வேண்டும்.
4. ''ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்'' என்பது தமிழர் அன்று சொன்னது. பெண்கள் ஆக்கபூர்வமானதையே செய்யவும்.
5. பிரித்தானியப் பிரதமர் தமக்கு உறுதியும் உற்சாகமும் அளித்த வைத்தியர்களை எம். அன். பி. (M & B) எனப் போற்றியுள்ளார். அவர்கள் மோறன் என்பவரும் பெட்போட் என்பவருமாவர். இதைக் கருத்திற்கொண்ட சிங்களவர் தங்களுக்கு மரவள்ளியும் வத்தாளையும் வாழ்வளிக்கும் என்றனர். Manioc and Bathala.

★ இல்லை என்னாதவர்க்கு எல்லாரும் உறவினர் ★



## யாழொலி

தமிழர் வாழ்வில் மங்கலங்கள் பொலிந்த காலத்தில் வையமுடையான் மகரயாழ் கேட்ட மக்கள் செவிகளில் 1620ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிலகாலம் கொசுக்களும் நுளம்புகளும் சிறகடித்து சங்கீதம் பாடியதும் உண்டு. நல்லவேளை வந்ததும் முத்தமிழ் வித்தகராயும் முதற் றமிழ் பேராசிரியராயும் தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் புகழ்பெற்ற விபுலானந்த அடிகள் தமிழரின் பழைய யாழைக்கண்டு விளக்கமும் தந்துள்ளார்கள்.

தமிழர் யாழ்கள் ஆதியாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டுயாழ் எனச் செந்தமிழ் சிவணிய பெயர்கள் பெற்று விளங்கின. பலவாய தந்திகளை மெல்லிய விரல்களால் தட்டி மீட்டி ஏழிசையெழுப்பிய பாணரும் பாடினிகளும் தமிழர் பண்பாட்டுத் திலகங்களாய் இருந்தார்கள்.

யாழ் வல்ல இசைத்தமிழ் பிரியனான ஒருவனின் பெயரால் வழங்கும் எங்கள் பிரதேசம் கொசுக்கள் நுளம்புகளின் குரலில் யாவ்னுவாகியொலித்தது. காவிரிப்பூம் பட்டணம், நாக பட்டணம், சென்னை பட்டணம் எனப் புகழ்பூத்த பட்டணங்களின் வரிசையில் யாழ்ப்பாணப் பட்டணம் தமிழுக்குச் சிறப்போசையாயுள்ள ழகரவொலியோடு வழங்கி வந்தது.

எண்சாண் உடம்புக்குச் சென்னி பிரதானம் என்றே இசைக்கும் வகையில் எங்கள் இலங்கையின் தலையாய் விளங்குவது யாழ்ப்பாணம். இது புவியியலமைப்பில் மாத்திரமன்றி எல்லா வகையாலும்தான். இந்த யாழ்ப்பாண தேயத்தின் தலைநகராய் விளங்கிய நல்லூரும் பண்டைய ஆதித்த நல்லூர், திருவெண்ணெய் நல்லூர் முதலாய தலையாய நகரங்களோடு வைத்தெண்ணப்பட்டது. நல்லூர் தெய்வத்தன்மை வாய்ந்தது. கோயில் நகரமென விளங்கியது. நல்லூரில் வந்தெழுந்தருளிய கந்தப்பெருமான் கோயிலைச் சூழ நாற்பெருந் திசைகளிலும் பல கோயில்கள் அமைந்துள்ளன.

இன்று நல்லூரை மையமாகக் கொண்டு ஞானசம்பந்தப் பெருமான் திருநாமத்தால் திருக்கைலாய பரம்பரைத் திருமடமொன்று ஆதீனவரிசையில் அருமையாகப் பணி செய்து வருகின்றது. அதனால் நாளும் தமிழருக்கே உரிய பண்ணொலிப்பத்திருமுறைகள் முற்றோதல் நடைபெறுகிறது.

செந்தமிழ்த் தாயின் சிந்தை குளிரத் திருவள்ளுவர் ஆண்டு 2017 இன்றைய காலக் கணிப்பில் 1986 மலர்ந்துள்ளது. இந்த மலர்ச்சியாண்டில் செந்தமிழ் மணமும் திருவருள் ஒளியும் ஊர்கள்தோறும் பரவவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

## கிழங்கு விழவில்லையாம்

கிளிநொச்சியில் பிரமுகர் ஒருவர் தமது பண்ணையில் பனம் பாத்தியினருகே நின்று கிழங்கு விழவில்லை என்று சொன்னதைக் கேட்ட ஒருவர் இந்தச் செய்தியை அறிவித்தார். செய்தி விபரம் பெரிதல்ல. அது பாரதூரமான பாபம். அந்தப் பெரியவர் தமது சுற்றுடலில் உள்ளவர்களுக்கு விநியோகஞ் செய்வதாகக் கூறி மில்க்வைற் வாகனத்திலிருந்து பனம் விதைகளைச் சாக்குக்கணக்கில் இறக்கி, அவற்றைத் தமது பண்ணையில் பனம்பாத்தி போட்டு, விளைவை எதிர்பார்த்திருந்தார். பாவம் விளைவு வாய்க்கவில்லை. வாய்விட்டுப் புலம்பினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மலைவாழ் மக்களிடையே ஒரு இளம் பெண் துணிவாகக் கூறினாள், "வள்ளி கீழ் வீழா. வரைமிசை தேன் தொடா கொல்லையில் பசு கன்று ஈனா." வள்ளிக்கொடியில் கிழங்கும், மலைச்சாரலில் தேனும், பசுமாட்டிடம் சினையும் இல்லாமற் போவதற்குக் காரணம், மக்கள் அல்ல அஃதாவது பொல்லாங்கு புரிந்தொழுகலால் என்றாள்.

பாவம் இன்றைய மருதநில வாசி நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளார். இவருடைய திருநாமத்தை அம்பலப்படுத்துவதற்கு நாம் விரும்பவில்லை. இவர் தாமே உக்கி, உலர்ந்து தேறுவார் என்பது நிச்சயம். பட்சாத்தாபப்படுதலைவிடப் பெருந் தண்டனை அவருக்கு வேண்டாம்.

★ நடுவுநிலை தவறியவரின் வீடு பாழாகும் ★

## பாவங்கள்

நாங்கள் மூவகையாகப் பாவங்களைச் செய்கிறோம். நாம் மனதால் செய்யும் பாவம் அழுக்காறு, அவா, வெகுளி, கோபம், பகையைச் சாதித்தல், மறதி, வீண் நினைவு, தூய்மையின்மை என்பனவாம். நாம் வாக்கினுற் செய்யும் பாவம் பொய், புறங்கூறல், கடுஞ்சொல் கூறுதல், சுழிக்கப் பேசுதல், வெட்டெனப் பேசுதல், பரிகாசஞ் செய்தல், நிந்தித்தல் என்பனவாம். காயத்தினுற் செய்யும் பாவம் சோம்பல், தீயினஞ் சேர்தல், கொல்லல், களவெடுத்தல் முதலியனவாம்.

## பாவஞ்செய்யாமல் வாழ்க

" உள்ளம் உரை செயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை
உள்ளில் ஒடுங்கே ".

" Let us delight in the Lord in whom the world moves and has its being "

" நாங்கள் எங்களைப் பூச்சியம் ஆக்கி, ஒருவனே தேவன் என்று ஒன்ருய் உள்ள இறைவனேடு சேர்ந்தால் பத்தாய், நூறுய், ஆயிரமாய், லட்சமாய், கோடியாய், மேலும் வெள்ளம் முதலிய மகா கோடியாய் அனந்தமாய் ஆவோம் ".

" நீர் நுமது என்றிவை
வேர் முதல் மாய்த்து இறை
சேர்மின், அதன்
நேர் நிரை இல்லை "

திருமாலும் பிரமனும் மயக்கத்துக்கும் அகங்காரத்துக்கும் எடுத்துக்காட்டு. அகங்காரம் மயக்கம் நீங்கினுல் தான் ஆனந்தமயமான இறைவனைக் காணலாம்.

" The truth is that the fullest possible enjoyment is found by reducing our ego to zero "

"உள்ளம், உரை, செயல் இம் மூன்றும் இறைவன் பால் நிற்க, அவனிடம் நாம் ஒடுங்கி வாழ்வதே முறை".

திருச்சிற்றம்பலம்

ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்ருனே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே"

திருச்சிற்றம்பலம்

## தர்மபுரம் அன்னை கஸ்தூரிபா இல்லம் நன்றி கூறுகிறது.

முல்லைத்தீவு வீதியில் தருமபுரத்தில் அமைந்துள்ள கஸ்தூரிபா இல்லத்தருகே பொதுமக்கள் உபயோகத்துக்காகவும் பெருங்கிணறு தோண்டியுதவிய மில்க்வைற் தொழிலதிபர் அண்மையில் இல்லக் குழந்தைகளின் வசதி கருதிப் பெருமளவில் பாய்கள் கொடுத்துதவியதை ஊர்மக்கள் பெருமளவில் பாராட்டி வருகிருர்கள்.

## செயற்கரிய செய்துவரும் செயலாளர்

திருவாளர் சி. சி. வரதராசன் என்பார் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுச் செயலாளராவர். இவர் இக் கௌரவ சேவையிலிருந்தவாறே பிரதேசமெங்கும் மில்க்வைற் செய்தி கிடைப்பதற்கு வசதி செய்துள்ளதோடு செய்தியையும், இதனை வெளியிடும் தொழிலதிபர் கனகராசா அவர்களையும் பாராட்டியுள்ளார். இவர் பேச்சுக்கும் எழுத்துக்கும் நன்றி.

## சுருங்கச் சொல்லல்

பெரியவர்கள் மிகச் சுருக்கமாகவே பேசுவர், சொல்லுவர், எழுதுவர். மெய்கண்டார் மிகச் சுருக்கமாகவே பெரியதொரு நூலைச் செய்துள்ளார். திருவள்ளுவர் மிகக் குறுகிய செய்யுள்களில் பெரிய கருத்துக்களைக் கூறியுள்ளார். செல்லப்பா சுவாமிகள் நான்கு வாக்கியங்களில் பெரிய உண்மைகளை உரைத்துள்ளார். எல்லோருக்கும் முந்திய வேதகால முனிவர்கள் தங்கள் உபநிடதங்களில் பெரிய உண்மைகளைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்கள். ஔவையார் ஆத்திசூடி சுருங்கச் சொன்ன பெரிய புத்தகம்.

சுந்தரமூர்த்தி நாயனுர் தமது தேவாரப் பாடல்களில் வழிபாட்டோடு அதன் பயனேடு வரலாறுகளையும் சுருக்கமாகக் கூறியருளியுள்ளார். மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் இயமனை உதைத்தருளிய வரலாற்றையும், அடியவர்களுக்காக ஆலகால விடத்தை அருந்திய வரலாற்றையும் ஒரு தேவாரத்தில் அடக்கிப் பாடியருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

தஞ்சம் என்று தன்தாளது அடைந்த
பாலன்மேல் வந்த காலனை உருள
நெஞ்சில் ஓர் உதை கொண்ட பிரானை
நினைப்பவர் மனம் நீங்க இல்லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுள் மிக்கெழுந் தெரியும்
நஞ்சம் உண்ட நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என்னினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

## அன்பு செய்யுங்கள் தியாகஞ் செய்யுங்கள்

எவர் மனத்தில் அன்பு குடிகொண்டிருக்கிறதோ அவர் மனத்தில் ஆண்டவன் குடிபுகுந்துள்ளார். அன்பு ஒன்றே ஆண்டவனை அடையச் செய்யும் வழி. அன்பு ஒன்றே ஆண்டவனை நமக்குக் காட்டும். அன்பு மதமே உண்மையான சன்மார்க்கம். அன்பு மக்கள் மனத்தில் ஊறும் இன்ப நெகிழ்ச்சி. அன்பை அடிப்படையாகக் கொண்டால் தியாகம் பெரிதல்ல. ஒருவர் தியாகத்தால் பலர் வாழ்வு பெற்றுள்ளார்கள். அன்பும் தியாகமும் வளர்ந்தால் உலகம் வாழ்வு பெறும்.

அன்பே ஆண்டவன். இறைவனே தியாகி.

★ பிறர்மனை விரும்புவோன் பெரிய பாபி ★

## சிரிக்கவேண்டும்

நாங்கள் சிரிக்காத நாள் வீண் நாளாகிவிடுகிறது. சிரிப்பதால் நோய் துன்பம் முதலியன நீங்குகின்றன. சிரிப்பு மன மகிழ்ச்சியின் அறிகுறி. மகிழ்ச்சி மனநிலை களுள் ஒன்று. சிரிப்பு உடலுறுப்புக்களைத் துரிதப்படுத்தி அசைவு கொடுத்து அருமையான சுகத்தைக் கொடுக் கிறது. உள்ளேயுள்ள நுரையீரல், கல்லீரல், இருதயம், இரைப்பை, சுரப்பிகள் எல்லாவற்றையும் தொட்டுத் தழுவி அசைத்துச் சுகம் செய்யும் சிரிப்பு ஒரு வரப்பிர சாதம். இருதயம் துடித்து இரத்தம் பாய்ந்து, நுரை யீரலில் சுத்திகரிக்கப்பெற்று உடலுக்கு வெப்பத்தையும் உற்சாகத்தையும் தருகிறது. இந்த உற்சாகத்தால் உண் டாக்கும் ஒருவித ஒளி கண்ணையும் பிரகாசிக்கச் செய் கிறது. மார்பு அகல்கின்றது.

மனமகிழ்ச்சியும் புன்முறுவலும் சிரிப்பும் ஆயுளை நீடிக்கச் செய்யும். கடுகடுப்பாகவும் கறுவியமாகவும் கோபியாகவும் இருந்து முகத்தினழகைக் கெடுக்காமல் புன்முறுவல் பூத்தவண்ணம் இருக்கலாம். புன்முறுவல் இருந்த இடத்திலேயே இலவசமாக வருவித்துக்கொள்ள லாம். விகடம், நகைச்சுவை யாவும் எம்மை ஒருக்கால் சிரிக்கவைப்பதற்காகவே உள்ளன.

## தம்பி தங்கையர் கடமை

எங்கள் நம்பி நங்கையர்களே! நீங்களே வருங் காலத்து எங்கள் வாரிசுகள். நாட்டை அழகுபடுத்த அரும்பிய மலர்கள். நாளை விரிந்து மணங்கமழப் போகின்ற நீவிர் உங்கள் கடமையைக் கண்ணியம் கட்டுப்பாடு தவறாமற் செய்யுங்கள். புலவர், வீரர், உழைப்பாளிகள் ஆளுநர் என்றெல்லாம் வரிசையறிந்து கொலுவீற்றிருக்கப் பிறந்த நீவிர், இன்று செய்வன வற்றை நீவிரே இரண்டுதரம் ஆற அமரச் சிந்தித்துச் செயலாற்றுங்கள். இளமை முதற்கொண்டே வாழ்க்கை செம்மையாக அமையவேண்டும் என்பதால், இளமை யைப் பழுதாக்காதீர்கள். நீங்கள் என்றும் சுறுசுறுப்பா யிருத்தல் நல்லது. சோம்பல் மிகக் கொடிது. உழைத்து உண்ணல் தாரக மந்திரமாயிருத்தல் வேண்டும். கலங் காத உள்ளத்தவர்களாயிருத்தல் நாட்டுக்கு வரப்பிர சாதம். உங்களிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒழுக் கம் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகள் உங் களைப் பற்றுக்கோடாகக்கொண்டு படரவேண்டும். நீங் கள் அன்பின் சொரூபமாயும், அறிவின் சொரூபமாயும், ஆற்றலின் சொரூபமாயும், பண்பின் சொரூபமாயும், பொறுமையின் சொரூபமாயும் இருத்தல் வேண்டும். காந்தியடிகள், கஸ்தூரிபா உங்களுக்கு வாழ்ந்து காட்டி யுள்ளார்கள். அவர்கள் உங்களோடு வாழ்கின்றார்கள். நாங்கள் உங்களை நம்பியே வாழ்கின்றோம்.

## பெரு விண்ணப்பம்

''உலகில் அன்பும் தியாகமும் ஓங்கி வளர்ந்து, மக்கள் எல்லோரும் தம்மைப்போலப் பிறரையும் நேசிக் கத் தொடங்குவரேயானால், இவ்வுலகமே பூலோக சுவர்க்கமாக மலர்ந்து விளங்கும்.''

## உயிரினங்கள்

எங்கள் உலகமாய பூமிக்குள்ள தனிச்சிறப்பு இதில் உயிரினங்கள் வாழ்தலாகும். பூமியைப்போல இன்னும் வேறு உலகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. அவற் றைக் கோள்கள் என்றும் கிரகங்கள் என்றும் கூறுவர். பூமியும் ஒரு கிரகமே. பூமியைப்போன்ற மற்றைய கிரகங்களில் உயிரினங்கள் வாழுகின்றனவோ அல்லவோ என்று விஞ்ஞானிகள் ஆராய்கின்றார்கள்.

எங்கள் பூமியில் மனிதர் ஒருவகையான உயிரினம். மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள், எறும்பு கள் யாவும் உயிரினங்கள், உயிரினங்கள் எல்லாமாக ஒருகோடிக்கும் அதிகமானவை. இவற்றின் வேறாய் புல் பூண்டு, மரம், செடி, கொடி என்பனவும் உயிரினங்களே. இவற்றைத் தாவரங்கள் என்பர். தாவரங்களுள் 3,50,000 இனங்கள் உண்டு. எத்தனை விதமான மரங்கள், எத் தனை விதமான செடிகள், எத்தனை விதமான கொடிகள் உள்ளன என்று எண்ணிப் பாருங்கள்.

உயிரினங்கள் மலைகள், குன்றுகள், சமவெளிகள், காடுகள், பாலைவனங்கள், ஏரிகள், குளங்கள், ஆறுகள், கடல்கள் என்பனவாதிய இடங்களில் உள்ளன.

## பாட்டிலே கேள்வி

– பிறையணிவோன் –


1. விலங்கு வகையில் நீரருந்தா
   விலங்கின் பெயரை அறிந்திட்டால்
   கலக்கம் ஏதும் இன்றியென்றன்
   காது கேட்கக் கூறிடுவாய்.
2. மண்ணில் வாழும் விலங்கினுள்ளே
   மந்தமான தனிசோம்பல்
   கொண்ட விலங்கின் பெயர் தெரிந்தால்
   குறிப்பாய் எனக்குக் கூறிடுவாய்.
3. அதிகத் தொலைவு பறந்து செல்லும்
   ஆற்றல் கொண்ட பறவையின் பேர்
   அதிகநேரம் கடத்தாமல்
   அறிவிப்பாய் நீ என்றனுக்கே.
4. புலவர் செய்த செய்யுளுள்ளே
   புவியில் ஒன்று மிகப்பெரிதாய்
   உலவி வருவ தோடன்றி
   உயர்ந்தும் காணும் அதுயாது?

1. கோலா 2. சுலொத் 3. ஆர்ட்டிக்டென் 4. மகா பாரதம்

## நானுஓயாவில் சரஸ்வதி பூசை

நானு ஓயா சாள்ஸ்பெக் தமிழ் வித்தியாலயத்தார் மில்க்வைற் வெளியீடுகளை விண்ணப்பித்துப் பெற்றுப் பயன்படுத்தியதோடு, இம்முறை விஜயதசமி நாளை வெகு கோலாகலமாகக் கொண்டாடினார்கள். அறுபது அடி நீள மும் இருபது அடி அகலமும் கொண்ட புதிய மண்ட பத்தில் நவராத்திரி விழாவின் பின் சைவாசாரமுறைப் படி ஏடு தொடக்கினர். அதிபர் திருவாட்டி இமானுவல் அவர்களுக்கு எங்கள் பாராட்டு.

★ தரித்திரத்துள் பெரிய தரித்திரம் அதிருப்தி ★



# காந்தியடிகள் வாழ்வில்

காந்தியடிகள் தமது சேவைகளின் பொருட்டு மையத்தானமாக வார்த்தா ஆச்சிரமத்தை உருவாக்கிக் கொண்டார். தமது சகபாடிகளாக விநோபாபாவே, மகாதேவதேசாய், கஸ்தூரிபா, மீருபென் ஆகியோரையும் கொண்டு கிராமப் புனரமைப்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். கிராமக் கைத்தொழில்களை ஆரம்பித்தல், வீதிகளைச் செப்பமிடல், குப்பைக் கிடங்குகள் தோண்டுதல், உணவுப் பழக்கங்கள் பழகுதல் முதலிய பணிகளால் சேரி மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினர்.

காந்தியடிகள் தாமே கிராமவாசியானர். கிராமத்து மக்களைப்போல உடையணிந்தார், அவர்களோடு உண்டுறங்கி உடன் வாழ்ந்தார். கிராம மக்கள் அவரை அப்பு என்னும் கருத்தில் பாபு எனச் செல்லமாக அழைத்ததை அவர் பெரிதும் விரும்பினர்.

அதுகாறும் காங்கிரஸ் தாபனத்தின் ஆண்டு விழாக்கள் பெரிய நகரங்களிலேயே நடைபெற்று வந்தன. ஆனல் 1936 ஆம் ஆண்டில் காந்தியடிகள் காங்கிரசின் ஐம்பத்தோராம் ஆண்டு விழாவைக் கிராமத்தில் நடத்துமாறு உருக்கமாக வேண்டிக்கொண்டார். அங்ஙனமே பெயிஜ்பூர் என்னும் இடத்தில் விழா நடைபெற்றபோது ஜவர்ஹலால் நேரு தலைவரானர்.

## சம்பந்தர் போற்றிய செந்தமிழ்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சைவசமய குரவர்களுள் பெரிய பரமாசாரியராய் விளங்கியவர். அவர் செந்தமிழ்மீது கொண்ட பற்றுக் காரணமாக அதைத் தமது திருமுறைகளிற் பலவிடங்களில் போற்றிப் புகழ்ந்து பாடியருளியுள்ளார்.

எழுதுமொழி, முத்தமிழ், அசைவிலாத் தமிழ், அருமைவாய்ந்த தமிழ், அழகு நிறைந்த தமிழ், இசை மலிந்த தமிழ், இன்பம் பயக்கும் தமிழ், இனிமை கொண்ட தமிழ், கீதத்துக்கேற்ற தமிழ், குற்றமில்லாத தமிழ், சங்கத்தார் ஆய்ந்த தமிழ், மன்னர்கள் போற்றி வளர்த்த தமிழ், சந்தம் பொலியும் தமிழ், சீர்பெற்றுயர்ந்த தமிழ், சொல்வளம் நிரம்பிய தமிழ், பண் நிரம்பிய தமிழ், பொருள்வளம் நிறைந்த தமிழ், தேன்போலினிய தமிழ்.

## அறிய வேண்டியவை

1 பிரார்த்தனை செய்வதால் மனம் நிம்மதி அடைகிறது.
2 பிரார்த்தனை, தியானம், பூசை என்பன மன மாசு களைவன.
3 மூடருடன் வாழ்வதிலும் தனித்திருத்தல் மிகவும் நல்லது.
4 விவேகம், மகிழ்ச்சி, வைராக்கியம் ஒருவனைத் தயாரிப்பன.
5 நாம் என்ன தர்மம் செய்தோம் என்பதே சாந்தி தருவது.
6 அன்பு நிறைந்த குடிசை ஆண்டவன் உறையும் கோயில்.
7 வேலை என்பது உங்கள் திறமையைக் காட்டுவதேயாம்
8 நம் மனமே நம் வாழ்வின் வழிகாட்டியாயிருப்பதாகும்.
9 நல்வினைக்கும் தீவினைக்கும் நாமே பொறுப்பாளி.
10 நாம் செய்வன யாவற்றுக்கும் தக்க விளைவு உண்டு.
11 நாம் செய்யும் எல்லாவற்றுக்கும் முழு மூலம் அறிவு.
12 ஆனந்தம், உண்மை, அறிவு, என்பனவே இறைவன்.
13 அறிவினல் எல்லாவற்றையும் பெறமுடியும்.
14 எம் அறிவைப் பிறர் எவராலும் அழிக்கமுடியாது.
15 அறிவாழியின் பலம் அவரின் ஞானயுதத்தில் தங்கியுள்ளது.
16 மனத்தை அடக்கி ஆளக்கூடிய ஒரே ஆயுதம் ஞானம்
17 இறைவனிடம் கருணையையே இரந்து கேட்டல் வேண்டும்.
18 மனிதனின் பந்தபாசங்களுக்கு மனமே காரணம்.
19 முதியவருக்குக் கொடுக்கும் மரியாதை கடவுள் வழிபாடாகும்.
20 நல்ல மழை பெய்வதற்குக் கோளும் உதவுகின்றது.
21 நம் உள்ளத்தை இருத்தவேண்டிய இடம் இறைவன்.
22 படிக்காதவன் பேசாமல் இருந்தால் மதிப்புக் கெடாது.
23 ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பொறுமையாயிருத்தல் நல்லது.
24 கடவுளிடம் நம் சுமைகளை ஒப்படைத்தல் சுலபம்.
25 நமது நெடும் பயணத்துக்குத் தர்மமே கட்டுச்சாதம்.

## பறங்கியர் நடித்த நாடகம்

போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் 1624 ஆம் ஆண்டின் சித்திரைப் புதுவருடப் பிறப்பிலன்று பட்டப்பகலில் திருக்கோணமலையில் சாத்தான் நாடகம் ஒன்று நடித்தார்கள். அன்று நண்பகல் திருக்கோணஸ்வரப் பெருமானும் மாதுமையாளும் தேரேறி வீதியுலாப் போந்த வேளையில், ஆலயத்துள் ஒரு சில பிராமணர்களும் அடியார்களும் இருந்தார்கள். தருணம் பார்த்திருந்த பறங்கியர் மாறுவேடம் பூண்டு கோயிலுள் நுழைந்து சூறையாடியபோது வாள்விளையாட்டும் காட்டினர்கள்.

★ செல்வம் நிலையாது என்பதே சிந்தனை ★



## டாக்டர் வெற்றிவேலு

ஆங்கில வைத்தியத் துறையில் எங்கள் பிரதேசத்தில் அமெரிக்கர்களான கிறீன், யேம்ஸ்சன் முதலானவர்களுக்குப் பின் எங்கள் ஊரவரான பி. எஸ். எனப் புகழ்பெற்ற சுப்பிரமணியம் அவர்களின் பின் சனரஞ்சகமாக மக்கள் வைத்தியராகப் பெரும் புகழ்பெற்ற பெரியவர் வெற்றிவேலு அவர்கள். நவீன வைத்திய முறைகளில் கைதேர்ந்த நிபுணர் அவர் தமது முதுமையிலும் தளர்ச்சியின்றிச் சேவைசெய்து, திருவாசகம் ஓதியவாறே பூதவுடம்பை நீத்தார். அவர் புகழுடம்பு வாழும்.

## றப்பர்

இலங்கைக்குப் பெருமையும் வருமானமும் தரும் விளைப் பயிர்களுள் றப்பரும் ஒன்று. ஆங்கிலேயர் தமது ஆட்சிக் காலத்தில் ஓரளவு அபிவிருத்திக்காகவும் பெருமளவு வருவாய்க்காகவும் பெருந் தோட்டப் பயிராகத் தென்னிலங்கையில் நாட்டிய பயிர் றப்பர்.

இன்று இலங்கையில் ஏறக்குறைய 6,56,000 ஏக்கர் றப்பர் தோட்டங்கள் உள்ளன இவை சிறியனவாயும் பெரியனவாயும் உள்ளன. காடு திருத்தி பயிர்நாட்டி வளர்த்த பெருமை தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கே உரியதாகும்.

ஓரளவு றப்பர் மரம் வளர்ந்ததும் அதனைச் சுற்றி வர ஒரு வரை கீறிவிட்டால் அதன்வழி ஒழுகும் பால் பதப்படுத்தப்பட்டபின் றப்பராகும்.

றப்பரின் உபயோகங்கள் பலவாகும். அதனை மூலப் பொருளாகக்கொண்டு பலவிதமான உற்பத்திப் பொருள்களைச் செய்கிருர்கள். செருப்பு, சப்பாத்து, ரயர், ரியூப், பலூன், பசை, நார், பொம்மைகள், சேறுகாப்புகள், குழாய்கள், மெத்தைகள், சீற்கள் றப்பரினுல் ஆக்கப் பெறுவனவாகும்.

றப்பர் விளையும் பிரதேசங்கள் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு. காலி, குருணுகல், மாத்தளை, கண்டி, பதுளை, மொனருகலை என்பனவும் பிறவுமாம்.

ஒரு காலத்தில் மக்கள் சீன இலங்கை றப்பரைப் பெருமளவில் வாங்கியதோடு மாற்றுப்பண்டமாக அரிசி தந்ததும் உண்டு.

## உப்பு

உப்பு அருமையான பண்டம். அதன் அருமை அது சமைந்தால் தான் தெரியும். உணவுக்கு உப்பு அவசியம் என்பர். அது அளவோடு மிகக் குறைவாக அமைதல் நன்று. எவ்வளவுக்கு உப்பைக் குறைக்கினும் அதனுல் நன்மையுண்டு.

இலங்கை உப்புவிளையும் நாடு. உற்பத்தி செய்தல், சேகரித்தல், குவித்தல், பயன்படுத்துதல், விற்றல் என்பன உப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைகள்.

இலங்கையில் உப்பு விளையுமிடங்கள் : ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, பாலாவி மன்னர், நிலாவெளி, இருபாலை, செம்மணி, அராலி, கற்பிட்டி, அம்பாந்தோட்டை என்பனவாகும்.

உப்பின் பிரயோசனம் வீட்டுத்தேவை, மீன் பதனிடல், விவசாயத் தேவை, கைத்தொழிலுக்குப் பயன்படுத்தல்.

## இருவினை


புண்ணியம் ஆம், பாவம் போம் என்பது ஔவையார் வாக்கு. புண்ணியமும் பாவமும் சுவர்க்கம் நரகம் என்னும் அநுபவங்களுக்குக் காரணமானவை. செய்ய வேண்டியவை புண்ணியங்கள். தவிர்க்கவேண்டியவை பாவங்கள். புண்ணியம் பால் போன்றது. பாவம் அதில் கலக்கும் நீர் போன்றது. பாலைக் காய்ச்சும்போது முதலில் காய்வது நீர். அதுபோல் நாம் செய்த புண்ணிய பாவங்களுள் முதலில் அநுபவிப்பது பாவம். பாவமும் புண்ணியமும் இருவினைகள். இவை பிறவிக்குக் காரணமானவை. வினையின் வந்தது என்று தமிழ்ப்பௌத்தர் 2000 ஆண்டுகளுக்கு முன் பாடியுள்ளார். புண்ணியத்தை அறம், நல்வினை, பொருள் எனவும் வழங்குவர். பாவத்தை மறம், அறன்கடை, தீவினை என்றும் வழங்குவர்.

## கடல்

ஒரு நாட்டின் பல்வகை வளங்களுள் காடு, மலை, ஆறு என்பனவின் நிரையில் கடலும் ஒன்ருகும். கடல் தரும் வருமானம் கடல்படு திரவியம் எனப் பெயர் பெறும். எங்கள் உலகத்தில் நிலத்திலும் பார்க்கக் கடற் பரப்பே மிகப் பெரிதாகும். உலகின் தரையில் வாழும் உயிரினங்களை விட கடலில் வாழும் உயிரினங்களே இனத்தாலும் தொகையாலும் மிகப்பலவாகும். உலகின் உயிரினங்களுள் எண்பது வீதம் கடலில் வாழ்கின்றன.

கடலில் பலவிதமான மீனினங்கள், சங்குகள், சிப்பிகள் என்பனவற்றைவிட அங்கே உப்புவகைகள், உலோக வகைகள், பஞ்சு வகைகள், பாசி வகைகள் என்பனவும் உண்டு. கடலடியில் எண்ணெய் வளமும் அதிகமாக உண்டு.

★ உரைத்தாலும் மூடனுக்கு உணர்வு தோன்ருது ★



# ஆசிரியர் பகுதி

அந்தக் காலத்து ஆசிரியர்களைப்பற்றி இன்றைய முதியவர்கள் தலைவணங்கிப் புகழ்வதைக் கேட்டால் அந்தக் காலத்து ஆசிரியர்கள் பிள்ளைகளை மனிதராக்கப் பெருமுயற்சி எடுத்தார்கள் என்பதை அறியலாம். இன்றைய ஆசிரியர்கள் எல்லா வழிகளாலும் தரமானவர்கள். சிலர் பயிற்சி பெற்றவர்கள். சிலர் பயிற்சி பெறாதவர்கள். பயிற்சி பெற்றவர்கள் பலர் தாங்கள் பயின்ற படிப்பித்தலின் விதிமுறைகளை வெறும் சம்பிரதாயமாகக் கொண்டு பாடம் படிப்பித்தலும் உண்டு. அன்று மேற்பார்வையாளர் இல்லாமலே ஆசிரியர்கள் அருமையாகப் படிப்பித்தார்கள். இன்று மேற்பார்வையாளர் பலரிருந்தும் விதிமுறைகள் புறக்கணிக்கப்படுகின்றன. விதிமுறைகளில் விசேட பலனுண்டு என்பதை அநுபவமுள்ள ஆசிரியர்கள் அறிவர். சைவப்பெரியார் புலோலி சிவபாத சுந்தரம் அவர்கள் பயிற்சி பெறாத ஆசிரியராயிருந்தும் பயிற்சிநெறி எழுதியுள்ளார். அவரும் பழைய கல்விப் பணிப்பாளர் ஏச். எஸ். பெரேரா அவர்களும் கண்டறிந்த விதிமுறைகள் நீண்ட காலம் பாரம்பரியமாக நிலவி வந்தன.

இன்றைய பயிற்சியாளர் பலர் அவற்றை அறிதல் அவசியமாதலின் பழைய குறிப்புகளிலிருந்து சிலவற்றைச் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு பயன்படுத்தத் தருகின்றோம். பயன்படுத்திப் பாருங்கள்.

## A. வகுப்பு ஒழுங்கு

1 படிப்பிக்கும்போது வகுப்பை முழுமையாகப் பாருங்கள்.

2 கொடுக்கும் கட்டளைகளைத் தெளிவாகக் கொடுங்கள்,

3 கட்டளை கொடுத்தால் அது நிறைவேறுவதைக் கவனியுங்கள்.

4 பிள்ளைகளின் வேண்டுகோளைப் புறக்கணிக்காதீர்கள்.

5 வகுப்பறையில் தேவையில்லாத சந்தடி எழ விடாதீர்கள்.

6 நீங்களே தேவையற்ற சந்தடியை எழுப்பாதீர்கள்.

7 பிள்ளைகள் தம்மிஷ்டம் போல வகுப்பில் திரிய விடாதீர்கள்.

8 பிள்ளைகள் கையுயர்த்தி ஆ, ஆ எனக் குரலிட விடாதீர்கள்.

9 அப்படிச் செய்வேன், என்னைத் தெரியுமா எனப் பயமுறுத்தாதீர்கள்.

10 நாட்டமில்லாத பிள்ளைகளிடமும் இரக்கம் சகிப்புத் தன்மை காட்டி, அக்கறை உண்டாக்குங்கள்.

11 வகுப்புக்கு வரும்போதும் போகும்போதும் பிள்ளைகளின் ஒழுங்கைக் கவனியுங்கள். அவர்கள் வசதியாக இருக்கும் வகையைக் கவனியுங்கள்.

12 அளவுக்கு மிஞ்சிய சட்டங்களை உண்டாக்காதீர்கள்.

13 முரட்டுத்தனமில்லாமல் இறுக்கமாகப் பழகுங்கள்.

— தொடரும்


## விழாக்கள் பண்டிகைகளைக் கவனிக்கவும்

| | |
|---|---|
| தைப்பொங்கல் | ஆவணி மூலம் |
| தைப்பூசம் | விநாயக சதுர்த்தி |
| மாசி மகம் | நவராத்திரி |
| மகா சிவராத்திரி | விஜயதசமி |
| பங்குனி உத்திரம் | தீபாவளி |
| புதுவருடப்பிறப்பு | கந்தசஷ்டி |
| சித்திரா பூரணை | திருக்கார்த்திகை |
| வைகாசி விசாகம் | விளக்கீடு |
| ஆனி ஆருத்திரா தரிசனம் | விநாயக விரதம் |
| ஆடி அமாவாசை | திருவெம்பாவை |
| ஆடிப் பூரம் | |

## வாசிக்கும் பழக்கம்

பாரத நாட்டில் தமிழ்நாடு வாசிக்கும் பழக்கத்தில் தலைமை தாங்கினாற் போல இலங்கையில் வடபகுதி படிப்பார்வத்தில் தலைமை தாங்குகிறது. பிள்ளைகள் கருத்தூன்றிப் படிக்கிறார்கள். எழுவாய் பயனிலையில்லாத இலவச நூல்களையும் புறங்கண்டு நல்ல நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். இந்தியாவிலும் இலங்கையிலும் தரமான தமிழ் தலையெடுக்கும். இன்றைய ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்புப் பிள்ளைகள் நல்ல முறையில் எழுதுகிறார்கள். அவர்களின் இலக்கிய ஆர்வத்துக்கும் படிக்கும் பழக்கத்துக்கும் கட்டாயம் பயன் கிடைக்கும். கடுமையான விடுகதைகளைச் சிறு பிள்ளைகள் விடுவிக்கிறார்கள். தரமான கவிகளைச் சாதாரணமான நடையில் இயற்றுகிறார்கள். எங்கள் மத்தியில் இலக்கிய விழிப்பு உண்டாகி வருகிறது. பெரியவர்கள் தயவுசெய்து பிள்ளைகளுக்கு ஊக்கமளித்துப் பரிசு கொடுங்கள். மட்டந்தட்டாது, முதுகில் தட்டி உற்சாகப்படுத்துங்கள். வாசகர் வட்டம் வளர்ந்தாற்றான் புத்தகங்கள் பத்திரிகைகள் வரிசையாய் வளரும்.

★ வரவுக்கேற்ற செலவு செய்தலே மானம் ★



## திரு. இ. வைத்திலிங்கம்

யாழ்ப்பாணத்தார் பலரும் கணித மேதைகளாயும் பொறியியல் நிபுணர்களாயும் பெயர் பெற்றவர்கள். சாதாரண பொறியியலாளர் ஒருவர் இ வைத்திலிங்கம் அவர்கள் தமது கட்டடக்கலையில் சைவத்தமிழ்ப் பண் பாட்டைப் புகுத்தியொரு மறுமலர்ச்சியை உண்டாக்கியுள்ளார். அவருடைய கலைவண்ணம் பேசப் பல கட்டடங்கள் காத்திருக்கின்றன. இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டியவர் இடையில் எம்மைவிட்டுப் பிரிந்தமை எமக்குப் பேரிழப்பாகும்.

## கனிப்பொருள்கள்

ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் என்பன கடல், வளம், நிலவளம், மலைவளம் என்பனவாம். நிலவளத்தில் கனிவளம் என்பது ஒரு பகுதி. அது நிலத்தின் கீழ்க் கிடைக்கும் பொருள்கள். அவற்றை நிலந்தரு செல்வம் என்பர். நிலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப் பெறுவன கனிப்பொருள்கள். அவற்றைக் கனிவளம் எனவும் கூறுவர். அவை சுரங்கப் பொருள்கள் என வழங்குவதும் உண்டு.

கனிப்பொருள்களுள் இரும்பு, செம்பு, வெள்ளி, பொன், ஈயம் முதலிய உலோக வகைகளும், இரத்தினம், வைரம் முதலிய செல்வங்களும். நிலக்கரி, காரீயம் முதலிய பிற பொருள்களும், எண்ணெய் வகைகளும் அடங்கும்.

பொன், வெள்ளி, வைரம், எண்ணெய் முதலிய கனிப்பொருள்களால் பெரும் செல்வமீட்டும் நாடுகள் உள்ளன. இலங்கையில் இரத்தினக் கற்களும், காரீயமும் உண்டு.

காரீயம் வழுவழுப்பானது. அது நாமெல்லோரும் அறிந்த பென்சில் செய்வதற்கு மூலப்பொருள். அன்றி இயந்திரங்கள் வழுவழுப்பாக இயங்குவதற்கும் காரீயம் உதவுகிறது.

இலங்கையில் காரீயம் கிடைக்கும் இடங்கள் இரகதெரா, போகலா, தொடங்கஸ்லந்தை, மதுரகொட, மீகாகத்தன, கிக்கடுவ என்பனவும் பிறவுமாம்.

இலங்கையின் இரத்தினக்கற்கள் மிகப்பழைய காலந் தொடக்கம் நல்ல புகழ்பெற்றவையாகும். முற்காலத்தில் உரோமர், கிரேக்கர், அராபியர் முதலாய பிற நாட்டவர் பலரும் பெருந்தொகையான பொன்னோடு வந்து இலங்கையில் இரத்தினக் கற்களை வாங்கிச் சென்றனர்.

இலங்கையில் இரத்தினபுரி, றக்குவான, பலாங்கொடை முதலான இடங்களில் இரத்தினக் கற்சுரங்கங்கள் உள்ளன.

இலங்கையில் முற்காலத்தில் நுவரெலியா முதலிய இடங்களில் இரும்பு கிடைத்தது. கனிவளத்தைப் பற்றி விரிவாகப் படித்தறியப் புவிச்சரிதவியல் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இவற்றைப் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

## லபுகம நீர்த்தேக்கம்

கொழும்பு வாசிகளின் அப்புவுக்கு நூறாண்டு. கொழும்பில் இன்று நாளாந்தம் நான்கு கோடி கலன் அப்பு விநியோகமாகத் தான் பொய்யாது நின்றூட்டும் ஊருணி லபுகம நீர்த்தேக்கம். இதில் 1886 ஆம் ஆண்டில் நீர் தேங்கத் தொடங்கியது. அன்று கொழும்பு வாசிகளுக்கு ஒருகோடியே ஆறுலட்சத்து ஐம்பதினாயிரம் கலன் நீர் போதுமாயிருந்தது. சுதந்திரமடைந்த காலத்திற்கு முன் 1946 இல் மூன்றுகோடி கலன் போதுமாயிருந்தது. இன்று நான்கு கோடி போதாமலிருக்கிறது. இன்று கொழும்பில் ஆறுலட்சத்துக்கும் அதிகமானோர் தங்கியுள்ளார்கள். அன்றைய தேவையிலும் பார்க்க இன்றைய தேவைகளும் அதிகமாய்விட்டன. இன்று கொழும்பில் நாளாந்த வேலைகளுக்காக அயலிடங்களிலிருந்து வந்து போகின்றவர்கள் தொகையும் அதிகமாகும். அதுவும் ஏழுலட்சம் வரையிலிருக்கும் என்பர்.

இன்றைய தேவையின் பொருட்டு நீர்த்தேக்க வேலை ஓரளவுக்கு விசாலமாக்கப்பட்டுள்ளது. மூன்று தேக்கங்களிலிருந்து ஐந்து பெருங்குழாய்கள் விநியோகஞ் செய்கின்றன. லபுகம தேக்கம் கழனிகங்கையின் கிளையான வட்டுலுயாவின் நீரைக் கொள்ளுமளவில் 3300 ஏக்கர் பரப்புள்ளது. இதில் 12,35,000 கலன் நீர் தங்க வசதியிருந்தது. இன்று விசாலிக்கப்பட்டு 1,20,00000 கலன் நீர் கொள்ள வசதியுள்ளது.

அடுத்த தேக்கம் களத்துவேவா என்பது 310 கோடி கலன் கொள்ளத்தக்கது. இது நாளாந்தம் 90 லட்சம் கலன் நீர் விநியோகஞ் செய்கிறது. இதன் கொள்ளிடம் 3,300 ஏக்கர் பரப்பினதாகும்.

மூன்றும் ஊருணி அம்பத்தலை திட்டம் என்பதாகும். இவ்வாறான முறைகளால் மக்கள் குடியிருப்புக்களைத் தேடியோடும் நீர்க்குழாய்களின் நீளம் இலங்கையின் வடக்குத் தெற்கான நீளத்திலும் பார்க்கக் கூடியதாகும். குழாய்களின் மொத்த நீளம் 275 மைல் என்பர். அண்மையில் இடம்பெற்ற மாற்றங்கள் இவற்றின் வேருக அகலித்திருக்கலாம்.

★ அவரவர் வினைப்பயனை அவரவரே அநுபவிப்பர் ★



# திருப்பராய்த்துறைப் பெரியவரின் சமாதி

கங்கையிற் புனிதமான காவிரியாற்றின் கரையில் ஆதிகாலத்தில் எழுந்த திருக்கோயில்களுள் ஒன்று திருப் பராய்த்துறை. புண்ணிய தலமாய அவ்வூரில் எழுந் தருளியுள்ள பொன் மயிலம்மை சமேதராய பராய்த் துறை நாதரைச் சமய குரவர்கள் பாடியருளியுள்ளார் கள். வடமொழி வாணரும் இத்தல மகிமையை வெகு வாகப் போற்றியுள்ளார்கள். பிரமோத்தர காண்டம் இத்தலத்தில் நீராடுவதால் கிடைக்கும் பயனைப் போற்று கிறது. பராய்த்துறை என்பது பராய் என்னும் மரத்தி னடர்த்தியால் வந்த பெயராகும். இம் மரத்தின் இலை கள் பசுவின் நாக்குப் போன்றனவாகும்.

இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் ஹேமவனேஸ் வரி சமேதராய தாருகாவனேசுவரர் பாவங்களைப் போக்கு பவர். இவரைப் பராய்த்துறை நாதர் என்றும் அம்பிகை யைப் பொன்மயிலாம்பிகை எனவும் வணங்குவர்.

இத்திருக்கோயிலை ஆயிரத்து இருநூறாண்டுகளுக்கு முன் வணங்கிய திருநாவுக்கரசு நாயனர் ''காவிரித் தென்கரைத் திருப்பராய்த்துறை மேவிய செல்வரே'' எனப் போற்றி,

தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டை கட்டி யிணையடி யேத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே.

எனப்பாடியருளியுள்ளார்.

இன்று அப்பர் அடிச்சுவட்டில் நூற்றுக்கணக்கான மாணுக்கர் மாணுக்கியர் திருக்கோயிலில் பெருமளவில் தொண்டு செய்கிருர்கள். இவர்கள் திருப்பராய்த்துறை விவேகானந்த உயர்நிலைப் பள்ளியில் படிப்பவர்கள். பென்சில் பேனை பிடிக்கும் பள்ளிப் பிள்ளைகள் உழவாரம் பிடித்து உட்பிராகாரம் வெளிப்பிராகாரம், மண்டபம், கோபுரம், திருநந்தவனம், சுற்றுமதில்கள் எங்கும் தூய்மை செய்தார்கள். நூறு பிள்ளைகள் பலகுழுக்களா கப் பிரிந்து ஒன்றரை மணி நேரத்தில் அளப்பரிய வேலை களைச் செய்தார்கள்.

இவற்றுக்கெல்லாம் திருப்பராய்த்துறையில் முற்றிப் பழுத்த பெரிய சுவாமியார் ஒருவரின் ஆசீர்வாதம் முன்னுக்கும் பின்னுக்கும் நின்று செயற்படுத்தியது. திருப்பராய்த்துறை என்றதும் அங்கே நூற்றுக்கணக்கான பிள்ளைகளை மனிதராக்கும் ஸ்ரீமத் சிற்பவானந்த சுவாமி அவர்களின் நினைவு வருவதில் தடையேதுமில்லை.

சிற்பவானந்தரின் இருப்பிடம் பெரிய தவச்சாலை. அங்கே நடைபெறும் தொண்டுகள் பலவிதமானவை. பெரிய வீட்டுச் செல்லப்பிள்ளைகள், சொற்கேளாத துடி யாட்டமுள்ளவர்கள் சுவாமிகளின் கண்காணிப்பில் மனித ராகி வருகிருர்கள்.

சுவாமிகள் மேல்வீட்டில் தனிமையாக இருந்தவாறே தவச்சாலை தன்பாட்டில் இயங்குகிறது. இது தவவலிமை யால் இயங்கும் அற்புத நிறுவனம். சுவாமிகளின் கை எழுதிக்கொண்டே போகிறது. தர்ம சக்கரம் உருளு கிறது. அது முப்பத்து நான்கு முறை உருண்டபோது நானூறுக்கும் மேலான ஆரங்களை உலகத்தவர் கண்டுள் ளார்கள். ஒவ்வொரு ஆரமும் கதை பேசும். செய்திகள் சொல்லும். தர்மம் போதிக்கும். நல்லொழுக்கம் நீதி சாரம் கூறும். குழந்தைகள் முதல் பெரியவர்வரை நாள் தோறும் திருந்துவர்.

தர்மசக்கரம் உருண்டோடும்போது, சுவாமிகள் பெரிய நூல்களையும் சிறிய நூல்களையும் உருட்டிவிடுவர். இது மாயாசாலமோ என்று பார்ப்பவர் பிரமித்துநிற்பர். பகவத்கீதைக்கும் திருவாசகத்துக்கும் பாரிய உரைவிசே டம் உருண்டோடியது. கணபதி, சிவன், சக்தி, முருகன், திருவள்ளுவர் முதலான கைநூல்கள் பெருந்தொகையாக உருண்டோடியுள்ளன. சந்தேகம் தெளிவிக்கும் நூல்கள் ஒருபுறம், தாயுமானவர், இராமகிருஷ்ணர், விவேகானந் தர், சிவானந்தர் போதனைகள் ஒருபுறம். தினசரி தியா னப் புத்தகம் ஒருபுறம்.

இவையெல்லாவற்றையும் உருட்டிவிட்ட கை ஓய்ந்து விட்டது. உடம்பு சமாதியாய் விட்டது. எமது வணக்கம். சுவாமிகள் இளைஞராக இருந்த காலத்தில் சென்னையில் உயர்தரக்கல்வி பயின்ற காலத்திலேயே இராமகிருஷ்ண மடத்திலும் சுவாமி விவேகானந்தரிடத்திலும் விசுவாசம் கொண்டிருந்தார். தாம் உறைந்த திருவல்லிக்கேணி விக்ரோறியா விடுதியில் தம் அறையில் சுவாமி விவே கானந்தரின் படம் வைத்து வணங்கி வந்தார். சின்னு என்னும் இளமைப் பெயர்பெற்ற இவர் சென்னை இராம கிருஷ்ண மடத்தில் விவேகானந்த சுவாமிகளின் சகபாடி களைக் கண்ட பெரும் பேறு பெற்றவர். அவர்களிடம் கொண்ட பழக்கத்தால் காந்தம் ஏறப்பெற்றவர். அந் தக் காந்தசக்தி நன்முக வேலை செய்யவே தாமும் துறவி

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்)

★ எல்லாம் இறைவன் செயல் என்பதே உறுதி ★



## சிறுவர் பகுதி

## அவிழ்த்துப் பாருங்கள்

1 தோகை மயிலாள் சொகுசுக்காரி தோட்டியின் கையில் தொல்லைப்படுகிறாள்
2 நாலுமூலைப் பெட்டிமேலே நல்ல குதிரைக்குட்டி ஓடி மீள்கிறது
3 ஏழைகள் ஏறும் குதிரைக்கு எல்லா இடங்களிலும் ஓட்டை
4 நான் நடந்து போகையில் நல்ல மழை பெய்கையில் நான்குபேர் நனையாமல் வருகிறார்கள்
5 நீரோடி நிலம் குளிர்ந்து நெடுங்கதிர்கள் காய்த்து நிற்பக் காகம் இருக்க நிழலில்லை
6 நெஞ்சிலே விளைவது ஒரு கல் கடல்நீரிலே விளைவது ஒரு கல்
7 எட்டுக்காலில் நடந்துபோறவன் நேராகப் போகத் தெரியாதவன்
8 நொருக்கப்பட்ட மூன்றுபேர்கள் நுரைக்கிணற்றில் இரத்தம் கக்குவர்
9 பச்சை மாளிகையில் சிவப்பு மெத்தையில் கறுப்புத் துரைமார் கொண்டாட்டம்
10 பட்டை உண்டு சட்டையில்லை. கன்றுண்டு மடியில்லை.

1. துடைப்பம் 2. அம்மி – குழவி 3. கயிற்றுக் கட்டில் 4. பசுவின் முலைக்காம்புகள் 5. நெற்கதிர் 6 விக்கல் உப்புக்கல் 7. நண்டு 8. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு 9. பப்பாப் பழம் 10. வாழை

### சமாதி....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாய்த் தொண்டு செய்தவர். அவரை நேரிற் கண்டு கும்பிட்டு ஆசீர்வாதம் பெறும் பாக்கியம் மில்க்வைற் தொழிலதிபருடன் 1975 மார்கழியில் அவரிடம் சென்ற எங்களுக்குக் கிடைத்தது என்பதையிட்டுப் பெருமை யடைகிறோம்.

## காற்று வாங்குதல்

நமக்கு இன்றியமையாத இயற்கை பொருள்களுள் காற்று மிக முக்கியமானது. நல்ல காற்றை நாம் சுவாசிப்பதனல் நமது இரத்தம் சுத்தமடைகிறது. இரத்தத்தைச் சுத்திகரிப்பதற்கு எம்முடம்பில் நுரையீரல் என்னும் சுவாசப்பைகள் உண்டு. நாம் மூக்கினுலேயே காற்றைச் சுவாசித்தல் வேண்டும். நாம் சுவாசிக்கும் காற்று சுவாசப்பையில் வரும் இரத்தத்தைச் சுத்திகரித்த பின் சென்ற வழியே மூக்குத் துவாரங்களால் வெளியே வரும். உள்ளே போகும் காற்றைவிட வெளியே விடும் காற்று அசுத்தமாய் வரும். வேருெருவரின் மூச்சுப்பட நாம் முகத்தை நீட்டலாகாது.

நாம் நல்ல காற்றைச் சுவாசிப்பதற்கு வாய்ப்பான இடங்கள் கடற்கரை, ஆற்றங்கரை, நல்ல வெளி, மலையடிவாரம், பூஞ்சோலை என்பனவாகும். நாங்கள் காலையிலும் மாலையிலும் வெளியே சென்று நல்ல காற்றைச் சுவாசித்தலையே காற்று வாங்குதல் என்கிறோம். காற்று இலவசமாகக் கிடைக்கிறது. அது கடவுள் தந்தது. காற்றில்லாவிட்டால் நாம் வாழ முடியாது.

நல்வழி என்னும் மாதாந்தப் பத்திரிகையில் நல்லதொரு பாட்டு உங்கள் கவனத்துக்குத் தந்துள்ளார்கள்.

### காற்று

சிறிய சிறிய அறைகளில்
சேர்ந்து வாழும் யாவரும்
விரிந்த பரப்பில் அடிக்கடி
வந்து போதல் நல்லதாம்.
காலை மாலை வேளையில்
கரங்கள் ஓயும் போதிலே
சோலை ஆறு கடற்கரை
சென்று மீளல் நல்லதாம்.

## சிங்களவரின் அபிலாசை

ஒருவர் மாத்தறையில் பிறந்து களுத்துறையில் வாழ்தல் வேண்டும் என்பது பழைய காலத்துக் கரை நாட்டுச் சிங்களவரின் அபிலாசை என்பர். களுத்துறை மாவட்டம் 623 சதுர மைல் பரப்பைக் கொண்டது. ஏறக்குறைய 1,26,200 ஏக்கர் றபர் தோட்டத்தையும், 8,400 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தையும், 37,650 ஏக்கர் தென்னந் தோட்டத்தையும், 43,000 ஏக்கர் நெல் வயலையும், 1000 ஏக்கர் பழத்தோட்டத்தையும் கொண்டதாகும். அங்கே களுகங்கை, பெந்தோட்ட ஆறு பாய்ந்து வற்றாத வளம் கொழிக்கும்போது, சராசரியாக 130 அங்குல மழையும் பொழிகிறது. அங்கே மீன்பிடிப்பதற்கு நல்ல வசதியுண்டு. அங்கே இறால் அதிகமாகக் கிடைக்கிறது. இம்மாவட்டத்தில் எட்டுப் பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. களுத்துறைக்குப் புகழீட்டும் பழவர்க்கங்களுள் மங்குஸ்தான் பொங்கும் புகழ் வாய்ந்தது.

## தூய்மை

தூய்மையானவன் கடவுளை நெருங்கியவனுகிறுன். தூய்மை கடவுள் தன்மைக்கு அடுத்தபடியாகும். தூய்மை என்பது சுத்தம், பரிசுத்தம் என்றெல்லாம் வழங்கும். ஒருவன் உள்சுத்தம் உள்ளவனுயும் புறச் சுத்தமுள்ள வனுயும் இருத்தல் வேண்டும். மனமது சுத்தமானுல் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பர். சுத்தமான மனமே தெய்விகமாக இருக்கும். இறைவன் மாசற்றவர். அவர் மாசற்ருர் மனத்தில் உறைபவர். இறைவன் பரிசுத்தர், குற்றமற்றவர், தூய்மையானவர். அகத்தும் புறத்தும் சுத்தமானவன் தூயவன். அகத்தூய்மை வாழ்வில் அவசியமானது. உயிருக்கு உய்தி தருவது. புறத்தூய்மை உடம்பை நோய்வராமற் பாதுகாக்கும் அகத்தூய்மை அகத்தின் அழகு. அது முகத்தில் தெரியும். அகத்தூய்மை புலன்களின் வழி போகாமல், நற்குண நற்செயல், நல்ல எண்ணங்களால் தம்மைப் புனிதனுக்குவதேயாம். தீயநினைவுகளை வேரறக் களைந்தால் மனம் தூய்மையாகும். புறத்தூய்மை, உடல் தூய்மை, உணவுத் தூய்மை, உடைத் தூய்மை, உறைவிடத் தூய்மை, சுற்ருடல் தூய்மை. இவற்றை ஆண்டுக்கொருநாள் ஐக்கிய நாடுகள் கொண்டாடும்வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. நாளாந்தம் தூய்மையைக் கடைப்பிடித்து வாழ்வதே வாழ்வு.

## வட்டுக்கோட்டை
## திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

அப்பூதியடிகள் தமது தண்ணீர்ப்பந்தலுக்குத் திருநாவுக்கரசு நாயனுரின் திருநாமத்தை வழங்கிய பெரிய புராணக் கதையை நன்கறிந்த பெரியவர், அப்புக்காத்தர் வட்டுக்கோட்டை இராசரத்தினம் அவர்கள். எம். எஸ். என்னும் இரண்டெழுத்துப் பெயரால் புகழ்பெற்ற அந்த அப்புக்காத்தர் ஒரு பட்டதாரியுமாவர். சைவத்திலும் நாயன்மாரிடத்திலும் பெரும் பக்தி பூண்டவர். அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஒருகண், அன்றி மூளைப்பலமுமானவர். சேர். இராமநாதன் அவர்களின் அபிமானத்துக்குரியவராயிருந்தவர். இந்துபோர்ட் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் சைவப் பாடசாலைகள் நிறுவிய பணியில் பெரும் பங்குபற்றியவர். தாமே தமது ஊரில் ஒரு பாடசாலையை அமைத்த போது தமது பெயரை வழங்காமல் சமயகுரவரின் திருநாமத்தை வழங்கியவர். நாயன்மார்கள், சைவசமய குரவர்களின் திருநாமங்கள் இருக்கும்போது நாம் ஏன் நம் பெயரை இடுதல் வேண்டும் என்று உரத்துக்கூறிப் பலரை வாய்பொத்திப் பிரமிப்படையச் செய்த மகான். அவர்கண்ட திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அறுபதாண்டுச் சுழற்சி நிறைவேறியுள்ளது. அது வைரவிழாவாகவும் மணிவிழாவாகவும் ஒலித்து ஒளிகாணப் போகிறது. வாழ்க இராசரத்தினம் அவர்களின் பெயர். வளர்க திருஞானசம்பந்த வித்தியாசாலை.

## மரம் நாட்டும் வாய்ப்பு

பிரித்தானிய மன்னர்களுள் ஹனேவர் வம்சத்தவரான ஜோர்ச் மன்னர்களுள் ஒருவர் கமக்கார ஜோர்ச் எனப் பெயர் பெற்றவர். இலங்கையில் இதுவரை தம் கையால் ஆயிரக்கணக்கான மரங்களை நாட்டியும், பிறரைக்கொண்டு லட்சக்கணக்கான மரங்களை நாட்டுவித்தும் பெருமளவில் பசுமைப்புரட்சியை உண்டாக்கிய சாதாரண மனிதருள் ஒருவர் மில்க்வைற் தொழிலதிபர் என்று பல கோணங்களிலிருந்தும் வருகின்ற பாராட்டுக் கடிதங்கள் கூறுகின்றன.

நல்லவர்கள் பெரியவர்கள் நாளும் அவரை நாடி வருபவர்கள் பலவித கன்றுகளையும் விதைகளையும் கொண்டுவந்து தருகிறுர்கள். பலர் அவரிடமிருந்து கன்றுகள் விதைகளைப் பெற்றுப் போகிறுர்கள். கொண்டுங் கொடுத்தும் குடிமனைகள் எங்கும் மரங்களை நாட்டுவதற்குத் தொழிலதிபர் தயாராக இருக்கிறுர்.

அண்மையில் அவரைக்கொண்டு மரம் நாட்டுவித்தவர்கள் பலர். அவர்களுள் ஒருசிலரின் இருப்பிடங்களை யாவது கூறுவதாயின் பாஷையூர் அந்தோனியார் மகளிர் கல்லூரி, புதிய சோனகதெரு அபூபக்கர் சிறுவர் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை, இயக்கச்சி குடியேற்றப் பகுதி, அல்வாய் தெற்கு சூழல் பாதுகாப்புச் சங்கத்தார் வளவு, ஊரெழு விநாயகர் கோவில், தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி, தெல்லிப்பழை செல்லையா ஐக்கிய கணக்காய்வு நிலையம், மன்னூர் புகையிரத நிலையம், சுற்ருடல் பகுதிகள், சங்கானை நிகரை ஞான வைரவர் ஆலய சுற்ருடல், மாவடி வைரவர் சுற்ருடல் பகுதிகள்.

## ஜனவரி மாத

(2–ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 18 | சனி | — | அட்டமி – நவமி |
| 19 | ஞாயிறு | — | நவமி இரவு 9-34 வரை<br>இராமலிங்க சுவாமிகள் தினம் |
| 20 | திங்கள் | — | பிரதோஷவிரதம் |
| 21 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம்<br>டாக்டர். பி. எஸ். நினைவுதினம் |
| 23 | வியாழன் | — | பிரதோஷவிரதம்<br>பாரதவீரர் சுபாஸ் தோற்றம் |
| 25 | சனி | — | பூரணைவிரதம்<br>சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் நினைவு |
| 26 | ஞாயிறு | — | தைப்பூசம்<br>மாவிட்டபுரம் லட்சார்ச்சனை முடிவு |
| 30 | வியாழன் | — | சண்டேசுர நாயனுர் குருபூசை<br>மகாத்மா காந்தியடிகள் தினம் |
| 31 | வெள்ளி | — | லேடி இராமநாதன் நினைவு |

★ அன்பு என்றும் தோல்வியை அறியவில்லை ★

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள்,
பாவனையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**உழுவோம் - உழைப்போம் - உயர்வோம்**

**மில்க்வைற் தயாரிப்புகளுக்கு**
**கடந்த காலத்தில் தந்த ஆதரவுக்கு**
**நன்றி.**

மேலும் உங்கள் நல்லாதரவை வேண்டுகின்றோம்.




மில்க்வைற் தயாரிப்புகள் தற்பொழுது கூடிய நிறையுடன்
புதியமுறையில் மெருகூட்டப்பட்டு விற்பனையாகிறது.
மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே உதவுகிறது.

**மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச்**
**சேகரித்துக் கொடுத்து பெறுமதி வாய்ந்த**
**பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல 77, யாழ்ப்பாணம். ☎ 23233

## இராணியின் மணிவிழா

பிரித்தானிய இராணி இரண்டாம் எலிசபெத் 1926 ஆம் ஆண்டிற் பிறந்து வளர்ந்து 1952 ஆம் ஆண்டில் அரியணை ஏறியவர். வின்சர் வம்சத்தில் வந்த முதல் அரசி இவர். வின்சர் வம்சம் 1910 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜோர்ச் முடிசூடியதோடு முன்னணிக்கு வந்தது. அந்த வம்சத்தில் எட்டாம் எட்வேட், ஆறும் ஜோர்ச் ஆண்டபின் எலிசபெத் ஆள வந்துள்ளார். எட்டாம் எட்வேட் வின்சர் கோமகனுகி முடிதுறந்தமை காதல் விவகாரத்தால் வந்த விளைவு. அவர் 1936 ஆம் ஆண்டில் சில மாதங்கள் அரியணையிலிருந்து அரசபோகத்தைத் துறந்தவர்.

## வெட்டுக்கிளி

அழிகேடன், சால்விழுங்கி முதலிய பல பெயர்கள் வழங்க உலகமெங்கும் விளை நிலங்களின் மேல் பரந்த மேகம் எனப்படிந்து இறங்கி விளைவை நாசம் செய்யும் உயிரினம். விவசாயிகளுக்குப் பெரும் பகைவன். ஒரு மனிதன் மூன்றுவேளை உண்ணக்கூடிய உணவை 2000 வெட்டுக்கிளிகள் ஒரு நிமிட நேரத்தில் விழுங்கிவிடுகின்றன.

## சுற்றுடல் பாதுகாப்பு

இறைவன் படைத்த இன்பகரமான இயற்கையை மாசுபடுத்தும் உயிரினம் மனித வர்க்கம். தொழில் வளர்ச்சி என்று சொல்லிக்கொண்டே இயற்கை மூல வளங்களை விழுங்கி ஏப்பம் இடும்போது விடுகின்ற புகையும், கழிக்கின்ற நீரும் காசிபோன்ற நகரத்தையும் கங்கைபோன்ற நதியையுமே மாசுபடுத்தி விடுகின்றன. பூச்சிகொல்லி புழுக்கொல்லி என்று நாங்கள் தூவுகின்ற D. D. T. பொடி சூழலைத்தாக்குகிறது. என்றாலும் அதன் உபயோகத்தைத் தவிர்க்கமுடியாது இருக்கிறது. சுற்றுடல் எவ்வாறமையவேண்டும் என்று உலக நாடுகள் ஆராய்கின்றன.

## பண்டத்தரிப்பில் மரம் நாட்டு விழா

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியினர் பரந்த அளவில் மரம் நாட்டுவிழா நடத்தியபோது, மில்க்வைற் தொழிலதிபரும் உதவிக்கரம் நீட்டி விழாவை நிறைவேற்றியமையை அவ்வூரவர் பாராட்டி நன்றி கூறினர்.

## கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை

அரிச்சுவடி ஏடுகள் தயாரிப்பதற்குப் பெருமளவில் ஓலைச் சார்வுகள் கொடுத்தனுப்பியபின், மில்க்வைற் வெளியீடுகளை உரிமையோடு கேட்டுப் பெற்ற பாடசாலையினருக்கு எங்கள் பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-1-86.